


**இந்த கம்பனியின்கட்டுநாயக்க பண்டாநாயக்க சருதேச விமானநிலையம்/ கொழும்பு விமானநிலைய இரத்லானையில் நிலவும் பின்வரும் பதவியிலுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகைமைகளைக் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.**

## <u>தொழில்நுட்பவியலாளர் (கொத்தனார்) II ஆம் தரம்</u>

வேலையின் தன்மை: : மேற்பார்வை அதிகாரிகளால் கையளிக்கப்பட்டவாறு அடித்தளங்களை வெட்டுவதற்கு கயிறுகளை அடித்தல். அடித்தள பிணைப்பு, திண்காரை ஊற்றுதல், சுவர் கட்டுதல், கர்ப் பொருத்துதல்,கூரை முனை கட்டுதல், அரைசாந்து அடித்தல்,செங்கல் கட்டுதல், டைலிங் வேலைகள் (தட்டோடு), சிமேந்து போடுதல் அகிய அனைத்து மேசன் வேலைகள் மற்றும் புத்துப்பித்தல்களை மேற்கொள்ளுதல்.

**தொழிலின் தன்மை** :

(I) கொத்தனாருக்குரிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைப் பாதுகாப்பாக பொறுப்புடன் பயன்படுத்துதல் மற்றும் பராமரித்தல்

(II) அன்றாடம் கையளிக்கப்படுகின்ற பணிகள் மற்றும் பயன்படுத்தப்படும் பொருட்களின் பதிவுகளை வைத்திருத்தல்

(III) பணி நேரங்களில் சீருடை அணிந்திருத்தல், அதன் தூய்மை தொடர்பில் கவனம் செலுத்துதல் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை முறையாகப் பயன்படுத்துதல்

(IV) மேற்பார்வையாளர்களால் கொத்தனார்குக்கு கையளிக்கப்படுகின்ற அனைத்து கடமைகளையும் நிறைவேற்றுதல்

(V) அவசர சந்தர்ப்பங்களில், நிறுவனத்திற்குத் தேவைப்படுகின்ற எந்தவொரு கடமையும் அந்தந்த சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு நிறைவேற்றுவதற்கு இயலுமையாக இருத்தல்.

(VI) கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்திற்கு வெளியே உள்ள இரத்மலானை, பிதுறுதலாகல, கதிர்காமம் அல்லது மத்தளை அல்லது பிற தொலைதூர இடங்களில் தொடர்புடைய கடமைகளைச் செய்தல்.

**தகைமைகள்** : (அ) **தொழில்நுட்ப கல்லூரியொன்றின் மூலம் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால்**(T.V.E.C.) **ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தால் நடத்தப்படும் ஒரு வருட ^01& முழுநேர பாடநெறியை கொத்தனார் துறையில் வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும்**.

**<u>அல்லது</u>**

தேசிய தொழில் நெறிஞர் தொழில்சார் தகைமைகள் 4 ஆம் மட்டத்தில் (NVQ Level 4) தொழில்சார் சான்றிதழ் கொல்லத்து துறையிலிருந்து பெற்றிருத்தல்.

**மற்றும்**

(ஆ) பயிற்சிபெறும் காலவெல்லை / பாடநெறி காலவெல்லை / பயிற்சி காலவெல்லை உட்பட நான்கு வருட (04) அனுபவம் தொடர்புடைய துறையில் பெற்றிருத்தல்.

**வயது** : விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியாகும்போது நாற்பத்தைந்து (45)வயதுக்கு மேல் இருக்கக்கூடாது.

**சம்பளம்** : தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு அனைத்து கொடுப்பனவுகளுடன் கூடிய கவரச்சிகரமான சம்பளம் மற்றும் பல்வேறு சலுகைகளுடன் வழங்கப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை** : நடைமுறைத் தேர்வு மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம்

<u>பொது விடயங்கள் :</u>

**மேலேயுள்ள பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள், நிறுவனத்திற்குரிய நாடாளவிய ரீதியில் அமைந்துள்ள எந்தவொரு சேவை நிலையத்திலும் தேவையேற்படும்போது பணிபுரிய வேண்டும்.**

மேலேயுள்ள தகைமைகள் மற்றும் பணி அனுபவம் பெற்றிருந்தால், இந்த வலைத்தளத்தில் **உள்ள** மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை, தலைவர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி , பண்டாநாயக்க சருதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற முகவரிக்கு **2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06** ஆம் திகதியிற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அல்லது தூதஞ்சல் மூலம் மாத்திரம் முன்வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படுகின்ற கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் தொழில்நுட்ப வல்லுநர் (கொத்தனார்)தரம் II எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

**பாடநெறிச் சான்றிதழ்கள், சேவைச் சான்றிதழ்கள் மற்றும் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் எமது இணையதளத்தில் உள்ள மாதிரி விண்ணப்ப படிவத்துக்கமைய முன்வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

**தேர்வு செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்படும்.**

இந்த விளம்பரத்தின் மூல பிரதி சிங்கள மொழியில் தயாரித்த பின்னர் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதால், மொழிபெயர்ப்பில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால், மூல பிரதியாக சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட பதிப்பே மேலோங்கியிருக்கும்.

***தவிசாளர்***

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாநாயக்க சருதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

Advertised on 25/05/2025